## கமத்தொழில் தொழில்நுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவகம் - 2016

---

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த கமத்தொழில் தொழில்நுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவகத்தின் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவு மற்றும் 18 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் இயற்றப்பட்ட 2008 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க கமத்தொழில் தொழில்நுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவக சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவு மற்றும் பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(1) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 ஆம் அண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் III ஆம் பிரிவு கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் தீர்மானிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தைக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களால் எழும் தாக்கங்களைத் தவிர, 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த கமத்தொழில் தொழில்நுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமையை நிதிசார் கூற்றுக்களில் தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

**2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் மூலதனப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு செலவிட்ட ரூபா 29,148,559 செலவு செய்யப்படாத மூலதன மானியக் கணக்கிலிருந்து செலவிடப்பட்ட மூலதனக் கணக்கிற்கு மாற்றஞ் செய்யப்பட வேண்டியபோதும், ரூபா 8,237,513 மாத்திரமே அக் கணக்கிற்கு மாற்றஞ் செய்யப்பட்டிருந்தது. ஆகவே, ரூபா 20,911,046 தொடர்ந்தும் செலவு செய்யப்படாத மூலதனக் கணக்கிலிருந்தது.

(ஆ) காசுப் பாய்ச்சல் கூற்றில் காசாகப் பெறப்பட்ட வட்டி வருமானம் ரூபா 2,169,816 ஆகக் காட்டப்பட்டபோதும், உள்ளவாறு பெறப்பட்டது ரூபா 2,137,360 ஆகையால் ரூபா 32,456 அதிகரித்துக் காட்டப்பட்டு அதன் காரணமாக காசுப் பாய்ச்சல் கூற்றின் இணக்கம் தொடர்பாகக் கணக்காய்வில் சர்ச்சை எழுந்தது.

(இ) நிறுவகத்திற்குரிய 50 ஏக்கர் காணி மதிப்பீடு செய்யப்பட்டுக் கணக்கிலிடப்படவில்லை.

(ஈ) நிறுவகம் அமைந்துள்ள காணியைப் பயன்படுத்துவது தொடர்பான திட்டத்தைத் தயாரிப்பதற்கு மீளாய்வாண்டின்போது மொறட்டுவை பல்கலைக்கழகத்திற்கு ரூபா 1,600,000 கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய போதும் அதற்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்படவில்லை.

(உ) மீளாய்வாண்டில் பெற வேண்டிய வட்டி வருமானம் ரூபா 2,162,150 ஆகும். எவ்வாறாயினும், அதனை ரூபா 2,055,648 ஆகக் காட்டியமையால் நடைமுறைச் சொத்து ரூபா 106,502 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டினது நிதிக்கூற்றுக்களில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் சுட்டிக் காட்டப்பட்ட இடர்க் கடன் மீதி ரூபா 217,640 ஆகும். எவ்வாறாயினும், இடர்க் கடன் பதிவேட்டின் பிரகாரம் அம்மீதி ரூபா 224,583 ஆகியமையால் ரூபா 6,943 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) விவசாயிகளது நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களுக்கு ஆண்டின் இறுதியில் பெற வேண்டிய வட்டி வருமானம், பதிவேட்டில் ரூபா 289,980 ஆகவும் நிதிக்கூற்றில் ரூபா 53,500 ஆகவும் இருந்தமையால் அவதானிக்கப்பட்ட வித்தியாசம் ரூபா 236,480 ஆகும்.

(இ) மீளாய்வாண்டினது நிதிக்கூற்றுக்களின்படியான கையிருப்பு மீதி ரூபா 4,775,743 ஆகும். எவ்வாறாயினும், ஆண்டின் இறுதிக் கையிருப்பு மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் அப் பெறுமதி ரூபா 4,294,217 ஆகியமையால் ரூபா 481,526 வித்தியாசமேற்பட்டது.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமை அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1995 யூலை 14 ஆந் திகதிய 636 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவின் சுற்றறிக்கை | பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுகையில் அப் பரீட்சை நடைபெற்ற தினத்திலிருந்து 03 மாதங்களுக்குள் பரீட்சைப் பெறுபேறுகள் அறிவிக்கப்பட வேண்டுமாயினும், நிறுவகம் நடாத்திய 18 பரீட்சைகளது பெறுபேறுகளை வெளியிடுவதில் 04 முதல் 19 மாத காலம் சென்றமை அவதானிக்கப்பட்டது. |
| (ஆ) 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | (i) சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக 12 நிறைவேற்று தரத்தில் அல்லாத உத்தியோகத்தர்களுக்கு 26 சந்தர்ப்பங்களில் ரூபா 804,220 கூட்டுத் தொகை முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது.<br>(ii) சரியான மதிப்பீட்டைத் தயாரிக்காதபோதும், 7 சந்தர்ப்பங்களில் ரூபா 382,000 கூட்டுத் தொகையுடைய முற்பணம் வழங்கப்பட்டிருந்ததுடன், அதில் 51 முதல் 85 சதவீதமானவை பின்னர் காசாகவே தீர்த்து வைக்கப்பட்டிருந்தன. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டினது நிதிப் பெறுபேறுகள் ரூபா 10,828,494 பற்றாக்குறையானதுடன் அதற்கெதிரான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 5,991,049 ஆகவும் இருந்ததால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிப் பெறுபேறு ரூபா 16,819,543 நலிவடைந்துமிருந்தது. ஊழியர்களது ஊதியம் மற்றும் பணிக்கொடைக்கான நிதியேற்பாடு ரூபா 8,622,776 அதிகரித்தமையும் காலக் கழிவு ரூபா 9,014,133 குறைவடைந்தமையும் மேற்படி நலிவுக்கான பிரதான காரணிகளாகும்.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதிப் பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்கையில் 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரை மிகையானது வேறுபாடுகளுடன் அதிகரிப்புக்குள்ளாகியிருந்ததுடன், 2016 ஆம் ஆண்டில் பற்றாக்குறை ஏற்பட்டுமிருந்தது. எனினும், நிதிக்கூற்றில் ஊழியர்களது ஊதியமும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான தேய்மானமும் மீண்டும் சீராக்கல் செய்யப்படுகையில் 2012 ஆம் ஆண்டில் ரூபா 8,197,837 ஆகவிருந்த பங்களிப்பு 2015 ஆம் ஆண்டில் ரூபா 34,603,218 வரை தொடர்ந்து அதிகரிப்புக்குள்ளாகியபோதும், 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டில் ரூபா 27,126,300 வரையான குறைவும் ஏற்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

2008 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க கமத்தொழில் தொழில்நுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவக சட்டவாக்கத்தின் பிரகாரம் நிறுவகத்தின் பிரதான நோக்கம் கமத்தொழில் மற்றும் கமத்தொழில் தொழில்நுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞான மூலாதாரங்கள் தொடர்பாகத் தற்போது உயர் கல்வியல் ஈடுபட்டிருப்போருக்கு உயர் கல்வியை வழங்கி மேம்பாட்டையும் அபிவிருத்தியையும் அளிப்பதாகும்.

மேற்படி நோக்கங்களை நிறைவேற்றுவது சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இழைய வளர்ப்புடனான வாழைக் கன்றுகளது உற்பத்தி

2016 - 2020 கூட்டிணைந்த திட்டத்தின் நோக்கமாக இழைய வளர்ப்புடனான வாழைக் கன்றுகளது உற்பத்தியை அதிகரிப்பதன் வாயிலாக நிறுவகத்தின் வருமானத்தை அதிகரிப்பதும் விவசாயிகளது வருமானத்தை அதிகரிப்பதுமாகக் காட்டப்பட்டிருந்தது. எனினும், அந்நோக்கை அடைதற்கு நிறுவகம் தவறியிருந்ததை 2014,2015, 2016 ஆம் ஆண்டுகளது கன்றுகளுக்கான கோரிக்கை, உற்பத்தி மற்றும் விற்பனை தொடர்பான தகவல்களது பரிசீலனை புலப்படுத்தியது.

(i) கன்றுகளுக்கான கோரிக்கை வருடாந்தம் பெருமளவில் அதிகரித்திருந்ததுடன் அதற்கொப்பாக உற்பத்தியானது மிகவும் குறைவாக இருந்தது. இதன்போது 2015, 2016 ஆம் ஆண்டுகளில் கோரிக்கைகளுக்கு ஒப்பாக உற்பத்தியானது முறையே 44 சதவீதம் மற்றும் 37.6 சதவீதம் ஆகவிருந்தது. இக்காரணத்தின் நிமித்தம் அநேக கொள்வனவாளர்கள் தமது கோரிக்கைகளை இரத்துச் செய்ததும் அதனால் நிறுவகத்தின் எதிர்பார்த்த நோக்கம் ஈடேறவில்லை எனவும் பெறக் கூடிய இலாபம் கிடைக்காது போனமையும் அவதானிக்கப்பட்டன.

(ii) கன்றுகளுக்கான கொள்வனவுக் கட்டளைகளைப் பெறுதல், வழங்குதல், விற்பனை செய்தல் என்பவற்றிற்கு வெவ்வேறு பதிவேடுகள் இருந்தபோதும், அவை முறையற்றவாறு பேணப்பட்டமையால் பெறப்பட்ட கட்டளைகளின் பிரகாரம் கன்றுகள் வழங்கப்பட்டனவா, இரத்துச் செய்யப்பட்டனவா, எதிர்வரும் மாதங்களில் வழங்கப்பட்டனவா எனக் கணக்காய்வில் தெளிவுற அறிந்து கொள்ள முடியாதிருந்தது.

(iii) வாழைக் கன்று ஒன்றினது உற்பத்திச் செலவினம் 2016 ஆம் ஆண்டின்போது ரூபா 40 வரை குறைக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டபோதும், உற்பத்திக் கிரயம் ரூபா 71 வரை அதிகரித்திருந்தது. மேலும், கன்றுகள் அழிவுறும் விகிதம் 1.5 சதவீதம் வரை குறைக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டபோதும், அது 11.3 சதவீதம் வரை அதிகரித்துமிருந்தது.

(ஆ) 2016 - 2020 உபாய மார்க்க மற்றும் முகாமைத்துவத் திட்டத்தின்படி 2016 ஆம் ஆண்டில் பப்பாளிப் பழக் கன்று விற்பனை மூலம் ரூபா 1.62 மில்லியன் இலாபத்தைப் பெறுவதற்கும் ஏனைய பழங்களது விற்பனை மூலம் ரூபா 1.2 மில்லியன் வருமானத்தைப் பெறுவதற்கும் திட்டமிடப்பட்டபோதும், அந்நோக்கத்தை அடைந்திருக்கவில்லை. 2008 முதல் 2017 வரையான 09 ஆண்டுகளாக நிறுவகம் வாழைக் கன்றுப் பயிரிடல் நடவடிக்கையில் மாத்திரமே ஈடுபட்டிருந்ததுடன், வேறெந்தப் பயிரினதும் நடுகையில் கவனத்தைச் செலுத்தியிருக்கவில்லை.

(இ) இலங்கை அனுசக்தி அதிகார சபை 2016 மார்ச் 21 ஆந் திகதி ஜீவ எரிபொருள் பயன்பாட்டின் மூலம் செயற்படும் காய்கறி வகை மற்றும் பழங்களது உற்பத்தி இயந்திரம் ஒன்றை நிறுவகத்திற்கு வழங்கியிருந்ததுடன், மாணாக்கரது கல்வி நடவடிக்கைகள், குறித்த தொழில்நுட்ப அறிவை அதிகரித்தல், உணவு உற்பத்தி மற்றும் கமத்தொழில் துறையின் கீழ் சிறிய மற்றும் கிராமிய கைத்தொழிலாளர்களுக்கிடையே இம்முறைமையைப் பிரசித்தப்படுத்துவது என்பன இவ்வியந்திர வழங்கலின் நோக்கமாகவிருந்தது.

இது சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பாக அனுசக்தி அதிகார சபையுடன் தரவுகள் மற்றும் தகவல் பரிமாற்றத்தில் ஈடுபட புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றில் ஈடுபட வேண்டுமென அதிகார சபையின் பணிப்பாளர் சுட்டிக்காட்டியபோதும், அவ்வாறானதொரு உடன்படிக்கையில் ஈடுபட்டிருக்கவில்லை.

(ii) நன்கொடையாகப் பெறப்பட்ட இந்த இயந்திரத்தின் பெறுமதியை மதிப்பிட்டு அதனைக் கணக்கிலிடுவதற்கு நடவடிக்கை எடுத்திராததுடன், பொருத்தமானதொரு இடத்தில் அதனை நிறுவாது நிறுவக வாகனத் தரிப்பிடத்தில் பாதுகாப்பற்றவாறு இயந்திரம் நிறுவப்பட்டிருந்தது.

(iii) மாணாக்கரது செய்முறைப் பயிற்சிகளைத் தவிர வேறெந்த நோக்கத்தின் பொருட்டும் இந்த இயந்திரத்தை நிறுவகம் பயன்படுத்தியிருக்கவில்லை.

(ஈ) கமத்தொழில் தொழில்நுட்பப் பட்டப்படிப்புக் கற்கை நெறிக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட முதலாவது தொகுதி மாணாக்கரது கல்விசார் நடவடிக்கைகள் 2009 ஆம் ஆண்டில் ஆரம்பமாகி இறுதிப் பரீட்சை 2016 ஆம் ஆண்டில் நடைபெற்றிருந்தது. பட்டப்படிப்புக் கற்கை நெறி மூன்று கட்டங்களைக் கொண்டதாகும். முதற் கட்ட கற்கை நெறிக்குப் பதிவு செய்யப்பட்டிருந்த 60 மாணாக்கரில் 26 பேர் முதலாம் கட்டத்தை நிறைவேற்றாது கற்கை நெறியைக் கைவிட்டிருந்தனர். 25 மாணாக்கர் மாத்திரமே உயர் டிப்ளோமாக் கட்டத்தைப் பூர்த்தி செய்திருந்தனர். 09 பேர் மாத்திரமே பட்டப்படிப்புக் கட்டத்தைப் பூர்த்தி செய்யுமளவில் சித்தியடைந்திருந்தனர். கல்விசார் நடவடிக்கைகளுக்கு இணைத்துக் கொள்ளப்படும் மாணாக்கரில் 85 சதவீதமானோர் கல்விசார் நடவடிக்கைகளை இடை நடுவே கைவிடுவது தொடர்பாக நிறுவகம் தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு தகுந்த தீர்வை எட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விவசாயிகளது நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திலிருந்து 3 விவசாயிகளுக்கு 2014, 2015 ஆண்டுகளின்போது வழங்கப்பட்ட கடனின் தவணைப் பணமாகிய ரூபா 301,570 மற்றும் கிராமிய முயற்சிகளது அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (RURAL ENTREPRENEURSHIP DEVELOPMENT) மூலம் 5 விவசாயிகளுக்கு 2012, 2014 ஆம் ஆண்டுகளின்போது வழங்கப்பட்ட கடனில் ரூபா 114,660 தவணைப் பண நிலுவை என்பன மீளாய்வாண்டு இறுதியளவிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மின்னலால் ஏற்படும் விபத்துக்களைக் குறைப்பதற்கு 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 2,746,292 செலவில் நிர்மாணிக்கப்பட்ட பாதுகாப்பு முறைமை (LIGHTNING PROJECTION SYSTEM) குறித்த ஒப்பந்தகாரரால் 2016 சனவரி 16 அன்று வேலை முடிவுற்று ஒப்படைக்கப்பட்டிருந்தபோதும், அம் முறைமையில் நிலவிய குறைபாடுகள் காரணமாக குறித்த நிறுத்தி வைத்த பணம் விடுவிக்கப்படாதிருந்தது. எவ்வாறாயினும், கணக்காய்வுத் தினமான 2017 யூன் 30 வரை அக்குறைபாடுகளை நிவர்த்தி செய்திருக்காததுடன், அம் முறைமைக்கு வழங்கப்பட்டிருந்த உத்தரவாதக் காலமும் நிறைவடைந்திருந்தது.

## 4.3 பதவியணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரது எண்ணிக்கை 26 ஆகும். உள்ளவாறான எண்ணிக்கை 05 ஆகும். அதற்கமைய, ஒட்டுமொத்தமாகப் பதவியணியில் நிலவிய வெற்றிடங்கள் 21 ஆகும். அதனுள், கல்விசார் பதவியணியைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் 3 பேரதும் தற்காலிக செய்கைமுறையாளர்களது (TEMPORARY DEMONSTRATORS) 04 பதவிகள் குறைவாக இருந்தன.

(ஆ) பதவி ஒப்படைப்பு அடிப்படையில் கல்விசாரா பதவியணிக்கு முகாமைத்துவச் சபையின் அங்கீகாரத்தை மாத்திரமே பெற்று 46 ஊழியர்களை நிறுவகம் ஆட்சேர்த்திருந்தது. அந்த ஆட்சேர்ப்பிற்கு உயர் கல்வி அமைச்சினது அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) நிறுவகத்திற்குச் சொந்தமாக 01 கெப் வண்டி, 02 சக்கர டிறக்டர் ஒன்று, 04 சக்கர டிறக்டர் ஒன்று என்பன இருந்ததுடன் நிலவும் சாரதிகளுக்கான வெற்றிடங்களுக்கு நிரந்தர ஆட்சேர்ப்பின்றி பணி ஒப்படைப்பு அடிப்படையில் ஒரு சாரதி மாத்திரம் ஆட்சேர்க்கப்பட்டிருந்தார். எவ்வாறாயினும், நிலவும் சாரதிகளுக்கான வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பதற்கு சாரதிக்கான பதவி அங்கீகரிக்கப்படாமையே காரணம் என நிறுவகம் அறிவித்திருந்தது.

## 4.4 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உயர் கல்வி அமைச்சினால் 60 விடுதிகளுக்கான செயற்திட்டத்தின் கீழ் ரூபா 220,096,952 செலவில் 2014 ஆம் ஆண்டின்போது 100 அறைகளைக் கொண்ட 400 மாணாக்கர்ளுக்கான விடுதி வசதிகளைப் பெறக்கூடிய விடுதி ஒன்று நிறுவகத்தில் அமைக்கப்பட்டிருந்தபோதும், 45 அறைகளுக்கு மாத்திரமே தேவையான தளபாடங்கள் வழங்கப்பட்டிருந்தன. மேலும், இவ்விடுதியில் முழு நேர அடிப்படையில் வசிக்கும் மாணாக்கர் இல்லை என்றும் பரீட்சைகள், செய்முறைப் பரீட்சைகள் நடாத்தப்படும் தினங்களில் மாத்திரமே மாணாக்கர் தங்குமிட வசதிகளைப் பெறுவதும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிறுவகம் அமைந்துள்ள 50 ஏக்கரில் 40 ஏக்கர் காணி பயன்படுத்தப்படும் விதத்தைக் காட்டுமாறு திட்டத்தைத் தயாரிப்பதற்கு மொறட்டுவை பல்கலைக்கழகத்தில் வீடமைப்புக் கலைப்பீடத்தின் ஆலோசனைப் பிரிவுடன் 2016 ஒக்டோபர் 20 அன்று உடன்படிக்கையில் ஈடுபட்டு ரூபா 1,600,000 வழங்கப்படுவதற்கான இணக்கமும் ஏற்பட்டிருந்தது. முன்னுரிமைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தபோதும், சமுதாயத்திற்கு முன்மாதிரியாக விவசாய முயற்சியாளர்களுடன் காணியைத் தயாரிப்பதில் முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்காததுடன் அக்காணி எதற்கும் பயன்படுத்தப்படாதுமிருந்தது.

(இ) நிறுவகத்தின் கணனிப் பரிசீலனையகத்திற்கு 2014 ஆம் ஆண்டின்போது உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட 35 கணனிகளில் 14 பயன்படுத்தப்பட முடியாத நிலையில் இருந்தன. முகாமைத்துவம் இது தொடர்பாகப் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

## 5. கணக்களி தகைமையும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் முயற்சியாளர்களை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் ரூபா 1,400,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதும், ஆண்டின்போது அது தொடர்பான பணிகள் எதுவும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகப் பணிப்பாளரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | | அவதானிப்புகள் |
| --- | --- | --- |
| (அ) | நிலையான சொத்துக் கட்டுப்பாடு | நிறுவகத்திற்குச் சொந்தமான காணிகள் பயனுள்ள பணிகளுக்குப் பயன்படுத்தப்படாமை, சொத்துப் பதிவேடு தெளிவாக வகைப்படுத்தப்படாமை. |
| (ஆ) | பதவியணி நிர்வாகம் | பதவியணித் தேவைகளுக்கேற்ப அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மீளாய்வு செய்யப்படாமையும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையும். |
| (இ) | கடனுக்கான கட்டுப்பாடு | கடனை அறவிட நடவடிக்கை எடுக்காமை |